### மதுராந்தகம், தாராபுரம் சட்டமன்ற இடைத்தேர்தலில்

# தி.மு.க. வெற்றி பெறும்; தமிழ்நாட்டில் விரைவில் ஆட்சி மாற்றம் ஏற்படும்!

## செங்கல்பட்டில் நடைபெற்ற தி.மு.க. வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

**செங்கல்பட்டு, செப். 24-**

**தி.மு.க. சட்டத்துறை சார்பில் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், சட்டத்துறை இணைச் செயலாளர் ஐ.பரந்தாமனை ஆதரித்து, இடைத்தேர்தலில் ஆற்ற வேண்டிய தேர்தல் பணி குறித்த வழக்கறிஞர்கள் ஆலோசனைக்கூட்டம் சட்டத்துறை செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ முன்னிலையில் செங்கல்பட்டில் நடைபெற்றது.**

**இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு செயலாளர் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் கார்த்திகேயன் தலைமை வகித்தார். காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட அமைப்பாளர் கனகராஜ் வரவேற்புரை ஆற்றினார்.**

**இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் ஆர்.எஸ்.பாரதி பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.**

அவர் பேசியதாவது:

மதுராந்தகம் சட்டமன்ற தேர்தல் என்பது மிக மிக முக்கியமான தேர்தல் .இதற்கு முன்னால் நடைபெற்ற இடைத்தேர்தல் எல்லாம் வேறு, வேறு காரணங்களுக்காக நடைபெற்றது, சட்டமன்ற உறுப்பினர்கள் இறந்துவிட்டால் இடைத்தேர்தல் வரும், இல்லையென்றால், அதைவிட உயர்ந்த வேறொரு பொறுப்புக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ராஜினாமா செய்யும் நிலையில் அங்கு இடைத்தேர்தல் வரும், ஆனால் தற்பொழுது இடைத்தேர்தல் நடைபெறும் இரண்டு தொகுதிகளிலும் அவ்வாறு நடக்கவில்லை,

முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதை போல ஜனநாயகம் சாகடிக்கப்பட்டு விட்டதால் இந்த இரண்டு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இதனை நமது வழக்கறிஞர்கள் மக்கள் மத்தியில் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும், இந்தத் தேர்தல் என்பது எவ்வளவு முக்கிய மானது, கடந்த கால தேர்தலுக்கும் தற்போது இப்பொழுது நடைபெறுகிற இடைத்தேர்தலுக்கு என்ன வித்தியாசம் என்பதை மக்களுக்கு எடுத்து கூற வேண்டும்.

**1962 – இடைத்தேர்தல்!**

இந்த இடைத்தேர்தலில் நாம் எப்படிபணியாற்றிட வேண்டும் என்பதைஒரு வரலாற்று நிகழ்வை சுட்டிக்காட்டி குறிப்பிட விரும்புகிறேன் ,

1962இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாம் 50 பேர் வெற்றி பெற்றோம், ஆனால் அன்றைய தினம் காஞ்சிபுரத்தில் போட்டியிட்ட அண்ணா அவர்கள் தோல்வியுற்றார், அப்பொழுது ஏற்பட்ட அந்த வேதனையை நேரடியாக பார்த்தவர்களின் நானும் ஒருவன், இங்கு உரையாற்றிய என்.ஆர்.இளங்கோவின் தந்தை சோளிங்கர் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்றது. அப்பொழுது திருச்செங்கோடு நாடாளுமன்ற தொகுதி இடைத்தேர்தல் நடைபெற்றது. அப்போது அங்கு வெற்றி பெற்றவர் இறந்ததால் இடைத்தேர்தல் நடக்கவில்லை, தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சராக இருந்த டாக்டர் சுப்பராயன் வெற்றி பெற்ற திருச்செங்கோடு தொகுதியில், அவர் மராட்டிய மாநில கவர்னராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அங்கு பொதுத் தேர்தல் முடிந்த 2 மாதத்தில் இடைத்தேர்தல் வந்தது, அந்த காலகட்டங்களில் விலைவாசி போராட்டம் நடைபெற்றது, அந்தப் போராட்டத்தில் அண்ணா, கலைஞர் உள்ளிட்ட அனைத்து தலைவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மிகப்பெரிய பலம் பொருந்திய காங்கிரஸ் கட்சியை எதிர்த்து போட்டியிட்ட தி.மு.க. வேட்பாளரை, ஒவ்வொரு தி.மு.க. தொண்டனும் , எங்கள் அண்ணாவையே தோற்கடித்து விட்டீர்கள், எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்று தீவிரமுடன் பணியாற்றியதன் காரணமாக திருச்செங்கோடு இடைத்தேர்தலில் திமுகழகம் வெற்றி பெற்றது. இந்த வெற்றிதான் 1967-ல் தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது, அதன் தொடர்ச்சியாக தான் 1967 -ல் நடைபெற்ற பொது தேர்தலில் தி.மு.க. ஆட்சியைப் பிடிக்க காரணமாக அமைந்தது.

**வரலாற்று வெற்றியை பெறுவோம்!**

அதுபோன்ற வரலாறு 64 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இந்த இடைத்தேர்தலில் நடைபெற போகிறது, கழகத் தலைவரே தோற்றதால் ஒவ்வொரு தி.மு.க. தொண்டனும் எப்படியாவது இந்த இடைத்தேர்தலில் வெற்றி பெற்றாக வேண்டும் என்று தீவிரமாக பணியாற்ற வேண்டும், 1962-யை போல் ஒரு வரலாற்று வெற்றியை இந்த இடை தேர்தலில் நாம் பெற்றாக வேண்டும்,

எனவே இந்த இடைத்தேர்தலில் திமுகவினர் குறிப்பாக வழக்கறிஞர்கள் விழிப்புடன் பணியாற்ற வேண்டும்,



ஆளுங்கட்சியினர் அதிகார துஷ்பிரயோகம், அத்துமீறல்கள் நிச்சயம் அதிகமாக இருக்கும், அதனை எல்லாம் வழக்கறிஞர்கள் கண்காணித்து உடனுக்குடன் சட்டத்தின் துணையோடு எதிர்கொள்ள வேண்டும், இங்கு பணியாற்றுகின்ற கழகத் தோழர்களுக்கு, நிர்வாகிகளுக்கு வழக்கறிஞர்கள் பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டும்.

**தேர்தல் ஆணையர் புகார்!**

இன்று கூட தேர்தல் ஆணையத்தில் கழகத்தின் சார்பில் ஒரு புகார் அளிக்கப்பட்டது, தேர்தல் ஆணையத்திடம் த.வெ.க. வினர் அனுமதி பெற்று இருந்த 40 பேர் கொண்ட ஸ்டார் பேச்சாளர் பட்டியலில், காங்கிரஸ், வி.சி.க., மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், தலைவர்களின் பெயரும் அந்தப் பட்டியலில் இருந்தது,

ஒரு கட்சி ஸ்டார் பேச்சாளர் என்று அனுமதி பெற தேர்தல் ஆணையத்திடம் அனுமதி கேட்கும் போது, அந்தப் பேச்சாளர் அந்த கட்சியின் உறுப்பினராக தான் இருக்க வேண்டும், அவ்வாறு வேறு ஒரு கட்சி தலைவருக்கு அனுமதி வாங்குவது என்றால் அவர் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சியின் தலைவராக இருக்க வேண்டும், ஆனால் த.வெ.க. சார்பில் கொடுக்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் பட்டியலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களின் பெயர்களையும் சேர்த்து அனுமதி பெற விண்ணப்பித்திருப்பது தேர்தல் ஆணையத்தின் விதிகளுக்கு முரணானது, எனவே தான் , நாம் தேர்தல் ஆணையத்தின் விதிகளை சுட்டிக்காட்டி புகாரினை அளித்துள்ளோம்.

தற்பொழுது சட்ட அமைச்சராக உள்ளவர் மிக ஓவராக பேசுகிறார், சட்டத்திற்கும் அவருக்கும் சம்பந்தமே கிடையாது, வாயை திறந்தாலே பொய்தான் பேசுகிறார், ரீல்ஸ் போடுவதற்காக வாய்க்கு வந்ததை எல்லாம் உளருகிறார்,

அவருக்கு அவர் பாணியில் இனிமேல் பதிலடி கொடுக்க தி.மு.க. தயாராக இருக்கிறது.

**விழித்துக் கொண்ட மக்கள்!**

இந்த நான்கு மாத த.வெ.க. ஆட்சியில் மக்கள் நன்றாக விழித்துக் கொண்டுள்ளனர், எதற்காக தற்போது இடைத்தேர்தல் நடைபெறுகிறது என மக்கள் நன்றாக புரிந்து வைத்துள்ளனர்.

அதனால் தான் தற்பொழுது இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய தொகுதிகளில் த.வெ.க. வேட்பாளர்களை பொதுமக்கள் விரட்டியடிக்கிறார்கள், ஓட்டு கேட்க தொகுதிக்குள்ளே செல்ல முடியாத நிலை உள்ளது, அதனால் த.வெ.க. வேட்பாளருக்கு போலீஸ் பாதுகாப்பை அதிகரித்து போலீஸ் பாதுகாப்போடு ஓட்டு கேட்டு வருகிறார்கள், அவர்களது வேட்பாளருக்கு மட்டும் போலீஸ் பாதுகாப்பு கொடுத்தால் மற்ற வேட்பாளர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்கள் என்ற காரணத்தினால் , அதனால் திருட்டுத்தனமாக ஒரு சட்டத்தை போட்டு, அனைத்து வேட்பாளர்களுக்கும் போலீஸ் பாதுகாப்பு அளிக்கிறார்கள், இது இதுவரை எந்த தேர்தலிலும் நடைபெறாத புதுமையானதாக உள்ளது, நாங்கள் எங்களது வேட்பாளருக்கு போலீஸ் பாதுகாப்பு வேண்டாம் என்று சொல்லிவிட்டோம், ஏனென்றால் தி.மு.க. வேட்பாளர்கள் செல்லும் இடமெல்லாம் மக்கள் உற்சாக வரவேற்பு தருகிறார்கள், திமுகவிற்கு மக்கள் துணை இருக்கும் பொழுது எங்களுக்கு எதற்கு போலீஸ் பாதுகாப்பு என்று வேண்டாம் என்று சொல்லிவிட்டோம்.

**மக்களை ஏமாற்றிய விஜய்!**

இன்னும் ஒரு 15 நாட்கள் தி.மு.க. வழக்கறிஞர்கள் விழிப்புடன் பணியாற்ற வேண்டும், ஆங்காங்கு உள்ள பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றை நமது கழக நிர்வாகிகள் மூலம் உடனுக்குடன் தீர்த்து வைக்க துணையாக இருக்க வேண்டும், இடைத்தேர்தல் நடைபெறுகின்ற இந்த இரண்டு தொகுதிகளுமே திமுகவிற்கு சாதகமான தொகுதிகள் தான், தற்பொழுது நடைபெறுகின்ற ஆட்சி தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதிகளையெல்லாம் இதுவரை நிறைவேற்றாமல், ஓட்டு போட்ட நம்மையெல்லாம் ஏமாற்றி விட்டார்கள் என்று வாக்காளர்கள் கொந்தளித்து வருகிறார்கள், தி.மு.க. ஆட்சியின் போது பெற்ற நன்மைகளை தவிர, புதிதாக வந்த த.வெ.க. ஆட்சி எந்தத் திட்டத்தையும் புதிதாக கொண்டு வரவில்லை என்பதை மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள், இவையெல்லாம் நமக்கு சாதகமாக நிச்சயம் அமையும்,

எனவே இந்த தேர்தலில் ஒன்றை மட்டும் நமது நிர்வாகிகள் மற்றும் வழக்கறிஞர்கள் மனதில் வைத்து பணியாற்ற வேண்டும்,

இந்த இரண்டு இடைத்தேர்தலில் நாம் வெற்றி பெற்றால் நிச்சயம் தமிழ்நாட்டில் வரும் ஜனவரி மாதத்திற்குள் ஆட்சி மாற்றம் ஏற்படும். எனவே இந்த வரலாற்று வெற்றி கிடைக்க நாம் இடைவிடாது பணியாற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

மேலும் இக்கூட்டத்தில் சட்ட திட்ட திருத்தக்குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., கழக கொள்கை பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி.ஏ.எழிலரசன், சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.ரவிச்சந்திரன், ஜெ.பச்சையப்பன், சட்டத்துறை துணை செயலாளர்கள் கே.சந்துரு, பெ.இரகு , என்.மருதுகணேஷ், ஜி.சந்திரபோஸ், தலைமை கழக வழக்கறிஞர்கள் ஜெ. சரவணன், மீஞ்சூர் கே.சுரேஷ், சு.வை சுரேஷ், முன்னாள் அரசு வழக்கறிஞர் ஜி.தேவராஜன், மற்றும் கழக வழக்கறிஞர்கள் நன்மாறன், ஆறுமுகம், மனோகரன், பாலாஜி, கலையழகன், தனசேகர், பகவதி, வெற்றிச்செல்வன், மற்றும் காஞ்சிபுரம் வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட, திண்டிவனம், வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் ,கழக வழக்கறிஞர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக செங்கல்பட்டு மாவட்ட அரசு முன்னாள் வழக்கறிஞர் திருமுருகன் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.வி.எஸ். வெங்கடேசன்

**செப்டம்பர் 25 (2024)**



**தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**ஒருங்கிணைந்த தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நகரச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர், மாவட்ட அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**காவேரிப்பட்டினம் கூட்டுறவு சங்கத் தலைவர், நகர வங்கித் தலைவர், பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.**

**1996ஆம் ஆண்டு காவேரிப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அப்பகுதி மக்களுக்கு பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# இலண்டன் மைதானத்தில் 'டான்ஸ்' ஆடியதுதான் முதலீடு ஈர்ப்பா?

## த.வெ.க.வின் ஏமாற்று அரசியலுக்கு முடிவு: இடைத்தேர்தலில் கழகம் வெல்லும்!

தமிழக சட்டமன்றத்தில் விஜயும், நிர்மல்குமாரும் பேசிய பேச்சினைக் கண்டித்து, தமிழகம் முழுவதும் தி.மு.க. சார்பில் கண்டனக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. தமிழக முழுவதும் தி.மு.க. சார்பில் கண்டனக்கூட்டம் கூடாது. த.வெ.க.விற்கு நன்றி அறிவிக்கும் கூட்டம்தான் நடத்தி இருக்க வேண்டும்.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி எடுத்து வைத்த விவாதங்கள், தமிழ் கூறும் நல் உலகம் மனதார பாராட்டி வாழ்த்துகிறது.

த.வெ.க. தறுதலைகள் எதிர்க்கட்சித் தலைவருக்கு பதில் கூற முடியாமல் திணறிய காட்சியை நாடே பார்க்க வைத்ததே இதற்கு சாட்சி!

த.வெ.க. கட்சி ஆட்சியின் நடக்கிறது. தஞ்சாவூர் என்ன பாண்டிச்சேரியா? காரைக்காலா? கடைசிவரை தஞ்சைக்குள் சின்னவர் காலைக் கூட உங்களால் வைக்கவிட முடியவில்லை. தஞ்சாவூர் பக்கத்தில் உள்ள காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதனால் நீலாங்கரையிலேயே விசாரித்து இருக்கலாம். தன்னால் இயலாததை ஒப்புக் கொண்டு, உதயநிதி மாபெரும் சக்தியாக நிரூபித்தமைக்கு முதல் நன்றி விஜய்க்குதானே.

இரண்டாவதாக, ஜார்ஜ் பெர்ணான்டஸ் போன்ற தலைவர்களுக்கு இடம் கொடுத்ததற்காக மிசா அறிவித்து ஏறத்தாழ ஆறு மாதம் கழித்துத் தமிழ்நாட்டில் எமர்ஜென்சி அமுல்படுத்தப்படுகிறது. அமுல்படுத்தப்பட்ட அடுத்தநாளே, தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுகிறது. கலைக்கப்பட்ட அடுத்த நாளே, தளபதியைத் தேடி கோபாலபுரம் வந்த போலீசாரிடம் "தம்பி வெளியூர் சென்றுள்ளார், நாளை வருவார், சொல்லி அனுப்புகிறேன்" என கலைஞர் சொல்ல, அடுத்த நாளே வந்த தளபதி சிறைக்குச் சென்று, தொழுநோயாளிகள் தங்கி இருந்த 9-ம் எண் கொட்டடியில் அடைக்கப்பட்டார். அடுத்த நாள் ஆசிரியர் கி.வீரமணி, பாராளுமன்ற உறுப்பினர் ஆசைத்தம்பி, முன்னாள் மேயர் சிட்டிபாபுடன் வரிசையில் நிற்க வைத்து, தளபதி ஸ்டாலினும் நொறுக்கப்படுகிறார். சிட்டிபாபு குறுக்கே புகுந்து தளபதிக்கு விழுந்த அடியைப் பெறாவிட்டால் தளபதி அன்றே இறந்திருப்பார்.

தன் கையில் அடிபட்ட காயம் ஒரு மாதமாக ஆறாததால், தன் தந்தையும், தலைவருமான கலைஞரிடம் மறைப்பதற்காக வழக்கமான அரைக்கை சட்டை போடாமல், முழுக்கை சட்டை போடுகிறார், அதைப்பார்த்து கலைஞர் வருத்தப்படும் அளவு அடிபட்டதுடன், தன் சோற்றில் ஒருநாள் வேப்பெண்ணெய்யும், மறுநாள் மூத்திரமும், மற்றொரு நாள் மணலும் கலக்கப்பட்டது என்பதைக்கூட சொல்ல முடியாத துயரத்தை ஒன்றேகால் ஆண்டாக அனுபவித்தவர் தளபதி ஸ்டாலின் என்பதை இளைய சமுதாயத்திற்கு எடுத்துரைக்க வாய்ப்பு தந்தமைக்காகவும், த.வெ.க.விற்கு நன்றி கூறும் கூட்டமே நடத்த வேண்டும்.

ஆக தி.மு.க. 41 பேர் கரூர் மரணத்திற்கு த.வெ.க. தலைவர்களைக் கைது செய்யாமல், வழக்குப் போடாமல் விஜயைக் காப்பாற்றியதற்கு நன்றிக் கடனாக சின்னவர் கைது, தளபதி மிசா கைதி இல்லை எனக்கூறி தி.மு.க.விற்கு த.வெ.க. உதவியுள்ளது. நன்றிக்குரிய காரியங்களை செய்துள்ளது.

தமிழகத்தில் மிசாவில் கைது செய்யப்பட்ட 1027 பேரில் 419 பேர் தி.மு.கழகத்தினர்.

ஒருவர் கைது செய்யப்பட்டால், வழக்குப் பதிவு செய்து, நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்தித்தான் சிறைக்கு அனுப்பப்படுவார். ஆனால் வழக்குப் பதிவு செய்யாது, நீதிபதி முன்பு ஆஜர்படுத்தாது சிறைக்குள் தள்ளியது மிசாவில் மட்டும்தான். அதுகூட சட்ட அமைச்சருக்குத் தெரியாதா?

சில புத்திசாலிகள், 4 மகன்களில் அது என்ன ஸ்டாலின் மட்டும் கைது என்கிறார்கள். தலைவர் கலைஞரின் அக்கா மகன்கள் அமிர்தம், செல்வம் என இருக்கையில் அது என்ன முரசொலிமாறன் மட்டும் கைது ஏன் என்று எவனாவது கேட்க முடியுமா? அதுபோல்தான் ஸ்டாலின் மட்டும் ஏன் கைது எனக் கேட்கக்கூடாது.

எவருக்கு அரசியலில் ஆர்வமோ அவரைத்தான் எதிரியாக ஆளும் கட்சி குறிவைக்கும். பழுத்த மரம்தானே அதிகமாக அடிபடும்.

அந்த சிறையில் "9 வது பிளாக்" முழுவதும் எமர்ஜென்சி கைதிகளுக்காகவே ஒதுக்கப்பட்டது.

மீண்டும் சிட்டிபாபு டைரி புத்தகத்தை, நிர்மல்குமார் உள்ளிட்ட பள்ளிக்கூட மாணவர்களுக்கு வழங்க வேண்டும். சிட்டிபாபு டைரி எழுதும்போது தளபதி முதல்வராகவோ, கட்சித் தலைவராகவோ வருவார் எனக் கருதாத காலத்தில், ஏறத்தாழ 48 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது. அதைப் படிக்கும்போதே கல்நெஞ்சனத்தினரின் கண்களும் கலங்கும்.

5000 ஆண்டுகளுக்கு முன் என்ன நடந்தது என்று சொல்வதில் அர்த்தம் உண்டு. ஆனால் நாம் வாழும் காலத்தில் நடந்த சம்பவங்களுக்கு மணிக்கணக்கில், மாதக்கணக்கில் பதில் சொல்ல வேண்டுமா?

எங்கள் தளபதி மு.க ஸ்டாலின் முகத்தை சிறைக்காவலர்கள் தங்களது பூட்ஸ் கால்களால் மிதித்ததால், முகத்தாடை உடைக்கப்பட்டது கட்டணத்துக்குரியது என நீதிபதி எம்.எஸ். இஸ்மாயில் அறிக்கையில் கூறியுள்ளார். இரண்டாவது சாட்சியே தளபதிதான்.

சிறையில் 9 ஆம் எண் என்றே தலைப்பு போட்டு கயிலை மன்னன் ஒரு புத்தகமே வெளியிட்டார். அதையும் சிட்டிபாபு டைரியையும், இஸ்மாயில் கமிஷன் அறிக்கையையும் படித்துவிட்டு நிர்மல்குமார் பொதுவெளியில் மன்னிப்பு கேட்க வேண்டும்.

அற்பனுக்கு வாழ்வு வந்தால், அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பது போல விளையாட்டு மைதானத்தில் டான்ஸ் போஸ் கொடுத்த ஒரே ஆள் நடிகர் விஜய்தான்.

தொழில் முதலீட்டாளரை ஈர்ப்பதற்கு எதற்கு ஓட்டுனருடன் சென்றார். அழைத்துச் செல்ல வேண்டிய தொழில் அமைச்சர் கீர்த்தனா, தொழில் துறை செயலாளர் விஜயகுமார், தலைமைச் செயலாளர் சாய்குமார் உள்ளிட்ட அதிகாரிகளை ஏன் அழைத்துச் செல்லவில்லை?

விளையாட்டை துவக்கிவைக்கப் போனால் விளையாட்டு வீரர் உடையிலேயே காட்சியளிப்பீர்களா? மருத்துவமனை சென்றால் வெள்ளை கோட் பேண்டில் செல்வீர்களா? பேருந்தின் தடம் துவக்கும் விழா என்றால் காக்கி பேண்ட் சர்ட்டில் செல்வீர்களா? நீங்கள் சென்ற நேரம் அஜித் 38 வது இடத்திற்கு வந்தார். நீங்கள், இல்லாமல் ஸ்பெயின் சென்றால் அஜித் இரண்டாவது இடத்திற்கு வருகிறார்.

கழுத்தைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல, இங்கே இருக்கிற ஆலைகளின் அதிபர்களிடம் கையெழுத்துப் பெற லண்டன் சென்றது ஏன்? ஒரே உரிமையாளருக்கு இந்தியாவில், தமிழகத்தில் 32 தொழிற்சாலைகள் உள்ளன. அவர்களைத் தலைமைச் செயலகத்தில், நட்சத்திர ஓட்டலில் சந்தித்துக் கையெழுத்துப் பகிர்ந்துகொண்டு இருக்கலாமே!

மோடி பாணியில் நடந்திட விஜய் முயற்சிக்கிறார். மோடி கொரோனா காலத்தில் விளக்கேற்றி மணி அடி என்கிறார். விஜயோ லண்டன் தமிழ் மக்களை ஏமாற்றிட விளையாட்டு மைதானத்தில் டான்ஸ் போஸ் கொடுத்தால் போதும் என்று நினைக்கிறார்.

அனுமதி பெறாத கூட்டத்தை லண்டன் நீதிமன்றமும், காவல்துறையும் கண்டனம் செய்துள்ளது. கழகத்தலைவர் தளபதியார் அவர்கள் துபாய் போன்ற நாடுகளுக்குச் செல்லும் போது கடுமையான கூட்டம் வரும். இப்படியா பெயரைக் கெடுத்துக் கொண்டார்?

தறிகெட்டு ஓடும் குதிரை போல் திட்டமிடல் இல்லாமல் விஜய் அரசு செயல்படுவதால் நடைமுறைகள் கேவலப்பட்டு நிற்கின்றன.

கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை என்பது போல தந்தை பெரியாரினை, பேரறிஞர் அண்ணாவைத் தெரியாமல், அவர்களை இந்த அரசு கேவலப்படுத்துகிறது.

தமிழகத்தின் காவல் தெய்வம் தளபதி ஸ்டாலின் அவர்களால், உலகத்திலேயே காலை உணவுத் திட்டம் தமிழகத்தில் மட்டும்தான் செயல்பட்டது. தமிழகத்தைப் பார்த்து லண்டன், கனடா போன்ற நாடுகள் காலை உணவுத் திட்டத்தைப் பின்பற்றுவதாக அறிவித்தன.

தேர்தலுக்கு முன்பே, தேர்தல் முடிந்து ஆட்சிக்கு வந்தவுடன் காலை உணவுத் திட்டத்தை ஒன்றிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை நிறைவேற்றியதின் விரிவாக்கத்தை 6-ம் வகுப்புமுதல் 8-ம் வகுப்பு வரை விரிவு செய்யப்படும் என்றார் கழகத் தலைவர் அதற்குண்டான திட்டங்கள் தொடங்கப்பட்டு விட்டன என்றார் கழகத் தலைவர்.

அதை புதிய விஜய் அரசு பயன்படுத்திக் கொண்டது. ஆனால் தந்தை பெரியார் பிறந்த நாளில் பெரம்பலூரில் தொடங்கப்படும் என்று அறிவித்ததை நடைமுறைப்படுத்தவில்லை.

அதேபோல் தென்னாட்டுப் பெர்னாட்ஷா, இந்நாட்டு இங்கர்சால் என போற்றப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள் செப்டம்பர் 15ஆம் நாள் அன்று மாமன்சீர் தருவதாக அறிவித்தீர்கள். ஆனால் அதையும் தொடங்கவில்லை.

இந்த 60 ஆண்டு கால தமிழக ஆட்சியில் எந்த அரசும் செய்யத் துணியாத கேவலத்தை, அவமானத்தை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணாவுக்கு த.வெ.க. அரசு தந்திருக்கிறது.

கல்வியில் இந்தியாவில் தமிழகம் முதலிடம் வருவதை தடுக்க நீட் மூலம் தடுக்கப்பட்டது.

அடுக்கு மாடி வீடு கட்டினாலே விளையாட்டுத் திடல், பூங்கா என உள்ள பொது இடங்கள் வேண்டும் என்கிறபோது, இனி பல்கலைக்கழகம் அமைக்க சென்னையில் 100 ஏக்கர் என்பது 12 ஏக்கர் போதும் என யார் பேச்சைக் கேட்டு தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது? யாரைத் திருப்திப்படுத்த கல்விச் சீரழிவு?



**கவிஞர்**
**காசிமுத்து மாணிக்கம்**
**(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)**

மதுரை மீனாட்சி அம்மன் குடமுழுக்கில் ஆயிரம் விமர்சனங்கள், திட்டுக்கள். கம்பன் என்றால் சடையப்ப வள்ளல் நினைவுக்கு வருவது மாதிரி, மீனாட்சி அம்மன் என்றாலே பி.டி. ஆர் குடும்பம்தான் நினைவுக்கு வரும். பி.டி. ஆரின் குடும்பம் இடமில்லாமல் நிற்கிறது. ஆனால் கிறிஸ்துவ சுரண்டல் லாட்டரி மார்டின் குடும்பம் உட்கார்ந்து இருக்கிறது. அறங்காவலர் குழுவின் பல ஆண்டுகால முயற்சியில் நடைபெறும் புதுப்பிக்கப்பட்ட கோவிலின் கோபுரத்தில் சில மாதம்கூட ஆகாத சினிமா டிக்கெட் விற்கும் கூட்டமும், சுரண்டல் லாட்டரி விற்கும் கூட்டமும் ஆக்கிரமித்திருக்கிறது.

விஜய் பரந்தூர் என்றால் பலரையும் கேட்பாராம். பட்டினப்பாக்கம் என்றால் மீனவர்தானே என இளக்காரமாம். பட்டினப்பாக்க மக்களை மட்டுமல்ல, பட்டினப்பாக்கத்திலிருந்து ராமேஸ்வரம் வரை உள்ள கிறிஸ்துவ, இந்து மீனவர்களை அவமானப்படுத்தும் செயல் இது.

எதற்கெடுத்தாலும் புதிது தானே, அனுபவம் குறைவுதானே என்கின்றனர். பேரறிஞர் அண்ணாவின் தி.மு.க. 1967-ல் ஆட்சிக்கு வந்தபோது, புதிதுதான். அதற்காக இப்படியா உளறினார்கள்? ரோஜா தோட்டம் முழுவதும் ரோஜாவால் நிரம்பியிருப்பது மாதிரி எல்லா அமைச்சர்களுமே உளறினால் எப்படி? அ முதல் ஃ வரை அப்படி ஒரு உளறல்.

எம்.ஜி.ஆர்.கூட நடிகர்தான். 1977-ல் புதிதாக ஆட்சிக்கு வந்தவர் தான். ஆனால் விஜய் தனக்கு அடுத்த இடத்திற்கு புஸ்ஸி ஆனந்தை நியமித்தது போல, தனக்கு அடுத்த இடத்தில் அனைத்துலக எம்.ஜி.ஆர். மன்றத் தலைவர் முசிறி புத்தனையோ, ஐசரி கணேசனையோ எம்.ஜி.ஆர். நியமிக்கவில்லை. நாஞ்சிலாரை 1977-யிலும், அதன்பின் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியனையும் நியமித்தார்.

சட்ட அமைச்சராக ஓராண்டு முழுவதும் நிறைவு செய்து சிறையின் கொட்டடியில் தாடை உடைபட்டு, கையில் அரைக்கை சட்டை போட முடியாத அளவு பூட்ஸ் காலால் மிதிபட்டவரை வேறு வழக்காக இருக்கலாம் என கிறுக்குத்தனமாக உளறிய நிர்மல்குமார் போல் இல்லாமல், சட்ட அமைச்சராக நாராயணசாமி போன்ற முன்னாள் நீதிபதியை நியமித்தார்.

ஒரு ரூபாயினை நாம் கொடுத்தால், நமக்கு ஒன்றிய அரசு 40 ரூபாய் தருகிறது என்று கூறிய ஆதவ்அர்ஜுனா போன்றவர்களைப் போட்டதில்லை. கல்வி அமைச்சராக, ஆசிரியர் வேலை பார்த்துவிட்டு வந்த அரங்கநாயகத்தைத்தான் போட்டார்.

இடைத்தேர்தலில் தாராபுரம், மதுராந்தகத்தைத் தவிர மற்ற 5 தொகுதியில் தேர்தல் நடத்த த.வெ.க. முன்வரவில்லை. 7 தொகுதிகளிலும் நடத்திவிட்டால் 2019 தேர்தலில் அ.தி.மு.க. ஆட்சியில் ஒட்டுமொத்தமாக 21 இடத்தில் தேர்தல். அதில் எதிர்கட்சியான தி.மு.க. 21-ல் 13 இடம் வென்றது.

அதைப்போல மொத்தமாக இடைத்தேர்தல் வைத்தால் 7 இடத்தில் தி.மு.க. 6 இடமாவது பிடித்து விடும் என்பதால் 2 இடத்திற்கு மட்டும் தேர்தல் நடத்தி அரசின் முழுபலத்தையும் காட்டி வென்றுவிடலாம் என விஜய் அரசு வியூகம் அமைத்துள்ளார்

உங்கள் வியூகத்தால் வீழ்ந்திட இது அ.தி.மு.க. அல்ல. தி.மு.க.

தி.மு.க. அயிரை மீன் அல்ல, விஜய் வலைவீசி பிடித்திட. விலாங்கு மீன் போல வலையை கிழித்துவிட்டு வெளியே வருவான் தி.மு.க.காரன்.

குளித்தால் பொட்டுக்கள் அழியும், புருவங்கள் அழியாது. தி.மு.க. புருவம் அல்ல. தமிழினத்தின் முழு உருவம். உயிரிதயம்.

அரசன் பிள்ளைக்கு வாள் பிடிக்கும்

தமிழுக்கு "ழ" பிடிக்கும்

தாராபுரம், மதுராந்தகத்திற்குத் தி.மு.க. தான் பிடிக்கும். ஆகவே இந்த இரண்டு தொகுதிகளையும் தி.மு.க.வே பிடிக்கும்.